கூட நேரடியாக குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய இயக்குநரும், நானும் சென்று அந்தப் பணிகளைப் பார்வையிட இருக்கிறோம். இந்தப் பணிகள் செப்டம்பர் மாதம் 1991-க்குள்ளாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளாக இது 4 ஸ்டேஜ்களாக .கோக்கல் 30 ஆயிரம் லிட்டர், எல்.பி.எம். என்பது 1,50,000 லிட்டர், கூடலூர் பசார் 2 இலட்சம் லிட்டர், தேவர்சோலை - 10 மைல், 60,000 லிட்டர் என்ற அடிப்படையில் தொட்டிகள் கட்டப்பட வேண்டும். இந்த 3 ஆண்டுகளாக தேவர்சோலை—10 மைல் என்ற இடத்தில் மட்டும்தான் ஒரேயொரு தொட்டியைக் கட்டியிருக்கிறார்கள், இந்த அளவில் 3 ஆண்டுகளுக்கு ஒரு தொட்டி என்ற கணக்கில் இனி மீதியிருக்கக்கூடிய 3 தொட்டிகள் வருவதற்கு ஏறத்தாழ 9 ஆண்டுகள் ஆகுமா என்று நான் சந்தேகிக்கிறேன். (குறுக்கீடு)

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு ஆண்டு ஆகிறது. இந்த ஒரு தொட்டி கட்டப்பட்டது, இந்த ஓர் ஆண்டிலேதான். ஆகவே மற்ற பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டம்

* 3053—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிக்குச் சிற்றாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டப் பணி முடங்கியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கீழப்பாவூர் பேரூராட்சிக்கு மட்டும் சிற்றாற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன,